# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2022–2023

## வளர்தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TEDC - FRANCE

TEDC - FRANCE

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. இயல் இசை நாடகம் என்பன ______________ .

   ( முக்கனி, முத்தமிழ், முப்பால் )

2. முன்னாளில் அரச கட்டளைகளை மக்களுக்கு அறிவிக்கப் பயன்படுத்திய இசைக்கருவி ______________ .

   ( உடுக்கு, பறை, தண்ணுமை )

3. பின்வருவனவற்றுள் உயிர்மெய்யெழுத்துகள் ______________

   ( கு ங செ, அ ஆ இ, க் ங் ச் )

4. சேதாவின் நாட்குறிப்பில், மல்லிகாவும் குமுதாவும் ______________ விளையாடினர்.

   ( காற்பந்து, சதுரங்கம், பாண்டி )

5. புடவியின் வெப்பநிலை ______________ அதிகரித்துச் செல்கின்றது.

   ( படிப்படியாக, வண்ணவண்ணமாக, மணிமணியாக )

6. 27 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .

   ( இருபத்தேலு, இருபத்தேழு, இருபத்தேளு )

7. ______________ என நாம் மிகவிரும்பி ஏற்றுக் கொண்ட ஒருவரிடம் குறை இருந்தாலும் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்.

   ( பகைவர், தீயவர், நல்லவர் )

8. நீ காலையில் ________ உனது கடமைகளைச் செய்தல் வேண்டும்.

( எழுந்து, எழுது, எழுந்த )

TEDC

9. பயிலல் என்பது ______________

( கொடுத்தல், நடத்தல், கற்றல் )

10. தன் கொடியில் வீணையை முத்திரையாகக் கொண்ட மன்னன் ____________ .

( இராவணன், சங்கிலியன், எல்லாளன் )

11. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ______________ .

( புறநானூறு, சிலப்பதிகாரம், திருக்குறள் )

12. பழந்தமிழர் இசைக்கருவிகளின் நுணுக்கங்களை நன்கு ____________ .

( அறிந்திருந்தன, அறிந்திருந்தது, அறிந்திருந்தனர் )

13. கார்முகிலைக் கண்டால் தோகை விரித்து ஆடுவது ____________ .

( மயில், புறா, கொக்கு )

14. ஆடிப்பிறப்பன்று அவிக்கும் பண்டம் ____________ .

( தோசை, பொங்கல், கொழுக்கட்டை )

15. தன் நிழலைக் கிணற்றுள் கண்டு, குதித்து இறந்த விலங்கு ____________ .

TEDC

( சிங்கம், முயல், யானை )

16. நீர் + தொட்டி ________________

( நீர்தொட்டி, நீர்த்தொட்டி, நீற்தொட்டி )

17. **ஒலிவட்டு:**

தமிழருடைய கொண்டாட்டங்களில் சிறந்தது ________________ .

( கலைவிழா, ஆண்டுவிழா, தைப்பொங்கல்விழா )

18. "அடக்கம் உடையார் அறிவிலர்..." என்ற பாடல் இடம்பெற்ற நூல் ________________ .

( நாலடியார், மூதுரை, நல்வழி )

19. பூனை கத்தும். அது போல நரி ________________ .

( ஊளையிடும், முழங்கும், பிளிறும் )

20. தனித்து இயங்காத எழுத்துகள் ________________ .

( உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், முதலெழுத்துகள் )

21. தமிழரின் தாயகங்களில் ஒன்று ________________ .

( கனடா, இத்தாலி, ஈழம் )

22. இளந்திரையன் ________________ வீட்டுப்பாடங்களை அம்மாவின் உதவியுடன் செய்தான்.

( தனது, உனது, எனது )

23. இரவு என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( மாலை, காலை, பகல் )

24. கண்ணகிக்குச் சிலை வடித்த மன்னன் ______________ .

( சேரமான், அதியர்மான், செங்குட்டுவன் )

25. "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் ..." இதில் உறுமீன் என்பது

______________

( பெரியமீன், சிறியமீன், மீன்குஞ்சு )

26. மாவீரர் நாளன்று தேசியக்கொடி ஏற்றப்படும். ______________ கொடி வணக்கப்பாடல் ஒலிக்கவிடப்படும்.

( இப்பொழுது, அப்பொழுது, எப்பொழுது )

27. நாம் பள்ளியில் கற்றவற்றை ______________ மீட்டல் செய்தல் வேண்டும்.

( ஆண்டுதோறும், கிழமைதோறும், நாள்தோறும் )

28. குளிரில் ______________ என நடுங்கிய பாட்டிக்குச் சிறுவன் தனது குளிர்மேலாடையைக் கொடுத்து உதவினான்.

( கிடுகிடு, விறுவிறு, படபட )

29. **நொடி:**
எட்டாத தூரத்திலே எவரும் இல்லாக் காட்டிலே எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கிறாள். அவள் யார்?__________

( கதிரவன், விண்மீன்கள், நிலா )

30. மாமாவுக்கு மாமி போல தந்தைக்குத் ______________ .

( தாய், சிறுமி, தோழி )

புள்ளிகள் 30

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

TEDC

1. வெள்ளை, சிவப்பு நிறத்தாமரைப் பூக்கள் ____________________ காணப்படுகின்றன. ( குளம் )

2. நான் எனது ____________________ சுற்றுலாச் சென்றேன். ( குடும்பம் )

3. விளையும் ____________________ முளையில் தெரியும். ( பயிர் )

4. மாதவி காலையில் கத்தரிச் ____________________ நீர் ஊற்றுவாள். ( செடிகள் )

5. உழவன் தனது கடின ____________________ வாழ்வில் உயர்ந்தான். ( உழைப்பு )

TEDC

| புள்ளிகள் 05 |
|---|

**3) கட்டங்களில் உள்ள எழுத்துகளில் இருந்து சொற்களை உருவாக்கி வினாக்களுக்கு விடை எழுதுக.**

TEDC

| | | | |
|---|---|---|---|
| கு | த் | ரு | கா |
| ஆ | ப | ய | நீ |
| வ | சி | து | ம் |
| னி | | மை | தி |
| ரை | ந் | ல | ர் |

1. இலை உதிர்காலத்துக்கு அடுத்து வரும் காலம் ______________.

2. நீரில் செல்லும் உந்து ______________ .

3. ஒட்டு உயிரி ______________ .

4. மட்பானைகளை வனைபவர் ______________ .

5. ஆண்டின் நான்காவது மாதம் ______________.

TEDC

புள்ளிகள் 05

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. யானை மிகவும் ____________________ கொண்ட விலங்கு.

( பழம், பலம் )

2. கொக்கின் ____________________ நீளமானது.

( அலகு, அழகு )

3. அம்மா வாழைப்பொத்தியில் ____________________ செய்வார்.

( வரை , வறை )

4. மண்சட்டியில் சமைக்கும் ____________________ சுவையாக இருக்கும்.

( கரி, கறி )

5. ஆண்டுதோறும் தமிழ்மொழித்தேர்வு ____________________ மாதத்தில் நடைபெறும்.

( ஆணி, ஆனி )

TEDC

புள்ளிகள் 05

**5) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

TEDC

1. அண்ணா ஓய்வு நேரத்தில் செய்தித்தாள் ______________________ .

2. எடிசன் மின்குமிழைக் கண்டு ______________________ .

3. பூஞ்சோலையில் மலர்கள் பூத்துக் ______________________ .

4. தமிழிலக்கியங்களில் நட்புப் பற்றிக் ______________________ .

5. முயல் சிங்கத்தை அழிக்கத் திட்டம் ______________________ .

புள்ளிகள் 10

TEDC

6) **மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| பாக்குநீரிணை | வெற்றி | முதலாவது |
| ஊரில் | சென்றார் | |

வல்வெட்டித்துறை என்னும் ________________ 1943ஆம் ஆண்டு ஆனந்தன் பிறந்தார். இவர் சிறுவயதில் இருந்தே எதிலும் ________________ பெற வேண்டும் என விரும்பினார். இதற்காக இரவுபகலாகப் பாடுபட்டார். இதனால் உலக மட்டத்தில் பல வெற்றிப்பேறுகளைப் பெற்றார். இவரது ஏழு வெற்றிப்பேறுகள் உலக வெற்றிப்பேறு நூலில் இடம்பெற்றுள்ளன. 1975ஆம் ஆண்டு ________________ வழியாக தலைமன்னாரில் இருந்து தமிழகத்திலுள்ள தனுசுக்கோடி என்னும் ஊருக்கு நீந்திச் ________________. பின் அங்கிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று வெற்றி பெற்றார். இதுவே இவரது ________________ வெற்றிப் பேறாகும். இதன்பின் இவர் ஆழிக்குமரன் ஆனந்தன் என அழைக்கப்பட்டார்.

TEDC

TEDC

புள்ளிகள் 05

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. புலவர்கள் தமிழை எவ்வாறு போற்றுவர்?

________________________________________

________________________________________

2. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

________________________________________

________________________________________

3. தோற்கருவிகளின் இசையெழுப்பும் பகுதி எதனால் ஆக்கப்பட்டிருக்கும்?

________________________________________

________________________________________

4. கானகத்து விலங்குகள் முயலை ஏன் மதித்துப் போற்றின?

________________________________________

________________________________________

5. சொற்பொருள் தருக.

உடுக்கை ____________________

தொன்மை ____________________

TEDC

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் பல இசைக்கருவிகளைக் கண்டறிந்துள்ளனர். அவற்றுள் புல்லாங்குழலும் ஒன்றாகும். இது மிகவும் பழமை வாய்ந்த இசைக்கருவியாகும். இது துளைக்கருவி வகையைச் சேர்ந்தது. மூங்கில் மரத்திலிருந்து புல்லாங்குழல் செய்யப்படுகின்றது. மூங்கில் புல் இனத்தைச் சேர்ந்தது. இதனால் இதைப் புல்லாங்குழல் என்பர். இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் புல்லாங்குழல் அதிகமாகச் செய்யப்படுகின்றது. இதன் இசை கேட்பதற்கு இனிமையாக இருக்கும். எல்லோரும் புல்லாங்குழலின் இசையை விரும்பிக் கேட்பர்.

1. மிகவும் பழமை வாய்ந்த இசைக்கருவி எது?

___________________________________________

2. புல்லாங்குழல் எவ்வகையைச் சேர்ந்த இசைக்கருவி?

___________________________________________

3. புல்லாங்குழல் எதிலிருந்து செய்யப்படுகின்றது?

___________________________________________

4. புல்லாங்குழல் அதிகமாகச் செய்யப்படும் நாடுகள் எவை ?

___________________________________________

5. புல்லாங்குழலின் இசை கேட்பதற்கு எப்படி இருக்கும்?

___________________________________________

புள்ளிகள் 10

## 9) பின்வரும் சொல்லியங்களை உமது வாழிடமொழியில் எழுதுக.

TEDC

1. பாட்டி மருத்துவமனைக்குச் சென்றார்.

_______________________________________________ .

2. நாங்கள் காலையில் படிப்போம்.

_______________________________________________ .

3. எனது தாய்மொழி தமிழ்.

_______________________________________________ .

4. நான் கோடை விடுமுறைக்குத் தாயகம் செல்வேன்.

_______________________________________________ .

5. நேற்று மழை பெய்தது.

_______________________________________________ .

TEDC

புள்ளிகள் 05

**10) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**

TEDC



காட்டில் ஒரு சிங்கம் வாழ்ந்து வந்தது. .........

TEDC

புள்ளிகள் 15